



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்கள்
மற்றும் திடல்களில் 2016ன் ஹஜ்ஜுப் பெருநாள் அன்று ஓதப்படும் உரை

| | |
|---|---|
| வெளியிடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(www.awqaf.gov.ae) |

**2016 ஆண்டின் ஹஜ்ஜுப் பெருநாள் குத்பா பேருரை**
திங்கள்கிழமை, துல்ஹஜ் பிறை 10 ஹிஜ்ரி 1437
12th September 2016

| | |
|---|---|
| தலைப்பு: | ஹஜ்ஜுப் பெருநாள்! |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுல் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை வாட்ஸ்அப் மூலம் ஒலி-ஒளி வடிவில் பெற +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | ஹஜ்ஜுப் பெருநாள்! |
|---|---|

اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ
اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ
اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்
அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்
லா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து அல்லாஹு அக்பர்
கபீரா வல் ஹம்து லில்லாஹி கஸீரா வ ஸுப்ஹானல்லாஹி புக்ரத்தன் வ அஸீலா

அவனுடைய கிருபை எங்கும் நிறைந்துள்ளது, அவனுடைய அருள்வளம் அனைத்து படைப்புகளையும் சூழ்ந்துள்ளது. மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன்.

வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! **தொழுகையாளிகளே**! சுபிட்சமான இந்த பெருநாளில் உங்களுக்கு நற்பாக்கியம் நிலவட்டுமாக. பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் இந்த நன்னாளை புனிதம் நிறைந்த அரபா நாளுக்கு பிறகு தந்துள்ளான். நற்செயல்கள் மற்றும் இறை மன்னிப்பின் மூலம் இந்த நாளை கொண்டாடுவதற்காகவும் அதிக நன்மையை பெறுவதற்காகவும் இறைவன் இந்த நாளை வழங்கியுள்ளான். ஆம் இது நற்பாக்கியம் நிறைந்த நன்னாளாகும்.

புகழும், கிருபையும் நிறைந்த நாளாகும். நன்மையும், இறையருளும் கிடைக்கும் நாளாகும். புன்னகையும், உற்சாகமும் உள்ள நாளாகும். அன்பளிப்புகள் அதிகமாக வழங்கப்படும் நாளாகும். நல்லுபதேசங்கள் எங்கும் நிறைந்திருக்கும் நாளாகும். மனிதர்களுக்கு கிடைக்கும் அறிவுரையின் நோக்கம் அந்த அறிவுரைகள் நடைமுறைக்கு வருவதாகும். அதன்மூலமே மிகச் சிறந்த மாற்றம் ஏற்படும். அறிவுரைகளில் மிகச் சிறந்த அறிவுரை அல்லாஹ்விற்கு அஞ்சி நடப்பதை பற்றிய அறிவுரையாகும். இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும்

உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(16:128)

إِنَّ اللَّهَ مَعَ الَّذِينَ اتَّقَوا وَالَّذِينَ هُم مُّحْسِنُونَ

"நிச்சயமாக எவர்கள் மெய்யாகவே இறை அச்சமுடையவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுடனும், எவர்கள் நன்மை செய்கின்றார்களோ அவர்களுடனும்தான் அல்லாஹ் இருக்கின்றான்"

اللَّهُ أَكْبَرُ، اللَّهُ أَكْبَرُ، اللَّهُ أَكْبَرُ، لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ.
اللَّهُ أَكْبَرُ، اللَّهُ أَكْبَرُ، وَلِلَّهِ الْحَمْدُ.

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லா இலாஹ இல்லல்லாஹு
அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வ லில்லாஹில் ஹம்து

**உயரிய நற்குணங்கள் நிறைந்த தோழர்களே! நேரிய பாதையை பின்பற்றும் தோழர்களே!!** நம்முடைய பெருநாள் நற்குணங்களும், நேரிய பாதையும் கொண்டதாகும். ஷரீஅத் சட்டங்களில் உண்மை தன்மையை கொண்டுள்ளது. தூய்மையான அக்கறையை கொண்டுள்ளது. உள்ளங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்துள்ளது. கைகள் அனைத்தையும் கட்டிப்பிடிக்க வைக்கிறது.

இந்த நாள் பெற்றோர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டிய நன்னாளாகும். இதனைக் குறித்து எல்லாம் வல்ல ஏக இறைவன் வலியுறுத்திக் கூறியுள்ளான். பெற்றோர்களுக்கு பணிவிடை செய்வது, அவர்களின் உரிமையை நிலைநாட்டுவது, அவர்களிடம் நன்றி உணர்வோடு பழகுவது போன்றவற்றை திருமறைக் குர்ஆன் மூலம் இறைவன் அறிவுறுத்துகிறான்: (31:14)

وَوَصَّيْنَا الإِنْسَانَ بِوَالِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُ وَهْنًا عَلَى وَهْنٍ وَفِصَالُهُ فِي عَامَيْنِ أَنِ اشْكُرْ لِي وَلِوَالِدَيْكَ إِلَيَّ الْمَصِيرُ

"தனது தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து(க் கர்ப்பத்தில்) அவனைச் சுமந்து கொண்டலைந்தாள். (பிறந்த) பிறகும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். ஆகவே, நீ எனக்கும் நன்றி செலுத்து; உன்னுடைய தாய் தந்தைக்கும் நன்றி செலுத்து. முடிவில் நீ நம்மிடமே வந்து சேர வேண்டியதிருக்கின்றது"

பெற்றோர்களின் சிறப்பு மிகவும் உயர்வானதாகும். பழகுவதற்கு மிகவும் ஏற்றமான, நம்பகமான உறவு அவர்கள்தான். பணிவிடை செய்வதற்கும், கட்டுப்பட்டு நடப்பதற்கும், வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதற்கும் தகுதியுள்ள உறவு அவர்கள்தான். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (17:23-24)

وَقَضَى رَبُّكَ أَلاَّ تَعْبُدُوا إِلاَّ إِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا إِمَّا يَبْلُغَنَّ عِندَكَ الْكِبَرَ أَحَدُهُمَا أَوْ كِلاَهُمَا فَلاَ تَقُلْ لَهُمَا أُفٍّ وَلاَ تَنْهَرْهُمَا وَقُلْ لَهُمَا قَوْلاً كَرِيمًا* وَاخْفِضْ لَهُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحْمَةِ وَقُلْ رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا

"(நபியே!) உங்களது இறைவன் தன்னைத் தவிர (மற்றெவரையும்) வணங்கக்கூடாதென்று (கட்டளையிட்டிருப்பதுடன்) தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படியாகவும் கட்டளையிட்டிருக்கிறான். உங்களிடம் இருக்கும் அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்து விட்டபோதிலும் அவர்களை வெருட்டவும் வேண்டாம்; அவர்களை (நிந்தனையாகச்) "சீ" என்றும் சொல்ல வேண்டாம். அவர்களிடம் (எதைக் கூறியபோதிலும்) மிக்க மரியாதையாக(வும் அன்பாகவுமே) பேசுங்கள். அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடங்கள்! அன்றி "என் இறைவனே! நான் குழந்தையாக இருந்தபொழுது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் வளர்த்துப் பாதுகாத்தவாறே நீயும் அவ்விருவர் மீதும் அன்பும் அருளும் புரிவாயாக!" என்றும் நீங்கள் பிரார்த்தியுங்கள்!"

பெற்றோர்களுக்கு தொடர்ந்து பணிவிடை செய்து வரும் மனிதனை அருள் நிறைந்த இறைவன் பொருந்திக் கொள்கிறான். அந்த மனிதனின் ஆயுளை அதிகப்படுத்துகிறான். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

لاَ يَزِيدُ فِي الْعُمُرِ إِلاَّ الْبِرُّ

"பெற்றோர்களுக்கு பணிவிடை செய்வது நிச்சயம் ஆயுளை அதிகரிக்கும்" (2139 : الترمذي)

பெற்றோர்களுக்கு பணிவிடை செய்வது என்பது அவர்கள் உயிருடன் இருக்கும்போதும் செய்ய வேண்டும், இறந்த பிறகும் செய்ய வேண்டும்.

கிருபைகள் பொழியும் இறைவனின் பொருத்தத்தை பெறுவதற்காக இந்த நன்னாளில் நாம் உறவுகளோடு சேர்ந்து வாழ வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (4:1)

وَاتَّقُوا اللَّهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالأَرْحَامَ إِنَّ اللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

"மனிதர்களே! இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்தக் கலப்பு உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்.) நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கின்றான்"

இறைவன் கூறுவதாக நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹதீஸ் குத்ஸியில் கூறுகிறார்கள்:

قَالَ اللَّهُ: أَنَا اللَّهُ، وَأَنَا الرَّحْمَنُ، خَلَقْتُ الرَّحِمَ وَشَقَقْتُ لَهَا مِنَ اسْمِي، فَمَنْ وَصَلَهَا وَصَلْتُهُ، وَمَنْ قَطَعَهَا بَتَتُّهُ

"அல்லாஹ் தஆலா கூறுகிறான்: நான்தான் அல்லாஹ், மேலும் நானே அளவற்ற அருளாளன். இரத்த உறவுகளை படைத்துள்ளேன் அதனை எனது திருப்பெயரோடு சேர்த்துக் கொண்டேன். எனவே யார் இரத்த உறவுகளோடு சேர்ந்து வாழ்கிறார்களோ நிச்சயம் அவர் என்னோடு சேர்ந்து

கொள்வார். யார் அதனை துண்டித்துக் கொள்கிறானோ அவனை நான் முடித்துவிடுவேன்" (أبو داود: 1694 والترمذي: 1907)

இரத்த உறவுகள் என்றால் தந்தை வழியிலும், தாய் வழியிலும் உள்ள பாட்டனார், பாட்டியார், அவர்களுடைய பிள்ளைகள், அவர்களுடைய சந்ததிகள், சகோதரர்கள், சகோதரிகள், சிறிய தந்தை மற்றும் பெரிய தந்தைகள், மாமாக்கள், மாமிகள், மற்றும் அவர்களுடைய பிள்ளைகள் போன்ற அனைவரிடமும் எவ்வித ஏற்றத்தாழ்வும் இன்றி அக்கறையோடு பழக வேண்டும்.

முதலில் அவர்களை சென்று சந்தித்து "அஸ்ஸலாமு அலைக்கும்" என்கிற முகமன் கூற வேண்டும், பிறகு அவர்களுடைய நிலையை கேட்டறிய வேண்டும், முடிந்த அளவு உதவுவது அல்லது அதற்கான வழிவகைகளை எடுத்துக் கூறுவது, அவசியம் ஏற்பட்டால் தேவையான ஆலோசனை மற்றும் அறிவுரைகள் வழங்குவது, அவர்களுடைய சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வது, அவர்களிடம் ஏதேனும் குறைகள் இருந்தாலும், அவர்களின் அணுகுமுறையினால் சங்கடம் ஏற்பட்டாலும் அவற்றை இறைவனுக்காக சகித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் நமக்கு தீங்கு செய்யும் நோக்கில் இருந்தாலும், விருப்பமில்லாத வகையில் பழகினாலும் அவற்றை சட்டை செய்யாமல் இறைவனுக்காக நாம் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

لَيْسَ الْوَاصِلُ بِالْمُكَافِئِ، وَلَكِنِ الْوَاصِلُ الَّذِي إِذَا قُطِعَتْ رَحِمُهُ وَصَلَهَا

"பதிலுக்கு பதில் உறவாடுகிறவர் (உண்மையில்) உறவைப் பேணுகிறவர் அல்லர்; மாறாக உறவு முறிந்தாலும் அந்த உறவுடன் இணைகிறவரே உறவைப் பேணுபவராவார்" (البخاري : 5532)

பொதுவாக உறவுகளோடு இணக்கமாக வாழ்வதன் மூலம் நமது வாழ்வியல் ஆதாரங்கள் பெருகிக் கொண்டே இருக்கும். இதனால் நம்முடைய ஆயுளும் அதிகரிக்கும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ سَرَّهُ أَنْ يُبْسَطَ لَهُ رِزْقُهُ أَوْ يُنْسَأَ لَهُ فِي أَثَرِهِ؛ فَلْيَصِلْ رَحِمَهُ

"ஒருவர் செல்வ வளம் தமக்கு வழங்கப்பட வேண்டும் அல்லது தம் வாழ்நாள் அதிகரிக்கப்படவேண்டும்" என்று விரும்பினால் அவர் தம் உறவினர்களுடன் சேர்ந்து வாழட்டும்!" (متفق عليه)

பெருநாள் தினம் உள்ளங்களை மகிழ்விக்க கூடிய தினமாகும். தவறுகள் மன்னிக்கப்படும் நன்னாளாகும். இதயங்கள் அனைத்தும் தூய்மையாக இருக்கும் நாளாகும். எங்கும் நல்லெண்ணங்கள் நிறைந்திருக்கும் நாளாகும். மனிதர்களிடையில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக இந்த நன்னாளை பயன்படுத்திக் கொள்பவர் நிச்சயம் பாராட்டுதலுக்குரியவர். எப்போதும் தர்க்கம் செய்து கொண்டு பிரிந்து இருப்பவர்களை சேர்த்து வைக்கும் முயற்சிக்கு இந்த நாளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு முறை பின்வருமாறு கேட்டார்கள்:

أَلَا أُخْبِرُكُمْ بِأَفْضَلَ مِنْ دَرَجَةِ الصِّيَامِ وَالصَّلَاةِ وَالصَّدَقَةِ؟ قَالُوا: بَلَى.

"நோன்பு, தொழுகை, தர்மம் ஆகியவற்றில் உள்ள உயர்வை விட மிகச் சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?" என்று கேட்டார்கள். அதற்கு சஹாபாக்கள், "(தாராளமாக) கூறுங்கள்" என்று ஆர்வமுடன் சொன்னார்கள். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

قَالَ:إِصْلَاحُ ذَاتِ الْبَيْنِ

"சண்டையிட்டுக்கொண்ட இவர்களுக்கிடையில் சமாதானம் ஏற்படுத்துவதாகும்" (أبو داود : 4919 ، والترمذي: 2509)

யார் மற்றவரோடு மனக்கசப்போடு இருக்கிறாரோ அவர் இந்த நாளில் விட்டுக்கொடுத்து செல்லட்டும். காரணம் இந்த நாள் பெருந்தன்மையோடு நடந்து கொள்ளும் நாளாகும். இருவரில் யார் முதலில் விட்டுக் கொடுத்து செல்கிறாரோ நிச்சயம் அவரே உன்னதமான மனிதர்.

பெருநாள் என்பது அன்பும் தூய்மையும் நிறைந்த நன்னாளாகும். பாசமும் பரிவும் நிலவும் நாளாகும். இல்லங்கள் முழுவதும் புத்துணர்ச்சியினாலும், சந்திப்புகளினாலும் ஒளிமயமாக திகழும் நாளாகும். மற்றவர்களை அரவணைத்துச் செல்வது, விட்டுக்கொடுத்துச் செல்வது போன்ற நன்னடத்தை பண்புகளை பெரியவர்களிடமிருந்து பிள்ளைகள் கற்றுக் கொள்ளும் நாளாகும். பெரியவர்களை பின்பற்றி நடப்பது, அவர்களை சென்று சந்திப்பது, தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என அனைவரிடமும் நலம் விசாரித்து பெருநாள் சோபனம் கூறுவது உள்ளிட்டவைகளை பிள்ளைகள் நடைமுறை ரீதியாக கற்றுக் கொள்ளும் நாளாகும்.

اللَّهُ أَكْبَرُ، اللَّهُ أَكْبَرُ، اللَّهُ أَكْبَرُ، لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ.
اللَّهُ أَكْبَرُ، اللَّهُ أَكْبَرُ، وَلِلَّهِ الْحَمْدُ.

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லா இலாஹ இல்லல்லாஹு
அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வ லில்லாஹில் ஹம்து

**முஸ்லிம்களே**! இந்த நாள் அதிக தர்மம் செய்ய வேண்டிய நாளாகும். மிகக் குறிப்பாக ஒரு மனிதன் தன் குடும்பத்தினருக்கு செலவு செய்ய வேண்டிய நாளாகும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَفْضَلُ الدِّينَارِ؛ دِينَارٌ يُنْفِقُهُ الرَّجُلُ عَلَى عِيَالِهِ

"ஒரு மனிதர் தம் குடும்பத்தாருக்காகச் செலவிடுகின்ற ஒரு பொற்காசும் (தீனார்), அல்லாஹ்வின் பாதையில் தம் நண்பர்களுக்காகச் செலவிடுகின்ற ஒரு பொற்காசுமே அவர் செலவிடுகின்ற பொற்காசுகளிலேயே சிறந்ததாகும்" (مسلم : 994)

தம் சின்னஞ்சிறிய பிள்ளைகளுக்குச் செலவிடுகின்றவரைவிட அதிக நற்பலன் அடைந்துகொள்ளும் மனிதர் யார்? (ஏனெனில்) அவர்தம் பிள்ளைகளைச் சுய மரியாதையோடு வாழச்செய்கிறார். அல்லது அவர் மூலம் அல்லாஹ் அவர்களுக்கு உதவி, அவர்களைத்

தன்னிறைவுடன் வாழச்செய்கிறான். தன் குடும்ப உறவுகளுக்காக மிக தாராளமாக செலவு செய்யும் மனிதன் உண்மையில் சிறந்த மனிதன்.

மற்றவர்களை மகிழ்விக்கும் முயற்சியில் ஈடுபடும் மனிதன் மற்றவர்களை விட சிறந்தவனாக திகழ்கிறான். எனவே தேவையுள்ளவர்கள், ஏழைகள், பாதிக்கப்பட்டவர்கள் என அனைவரையும் எப்போதும் மிகக் குறிப்பாக இந்த நன்னாளில் மகிழ்விக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்:

أَحَبُّ النَّاسِ إِلَى اللَّهِ أَنْفَعُهُمْ لِلنَّاسِ، وَأَحَبُّ الأَعْمَالِ إِلَى اللَّهِ سُرُورٌ تُدْخِلُهُ عَلَى مُسْلِمٍ، أَوْ تَكْشِفُ عَنْهُ كُرْبَةً، أَوْ تَقْضِي عَنْهُ دَيْنًا، أَوْ تَطْرُدُ عَنْهُ جُوعًا

"மக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் இருப்பவரை அல்லாஹ் மிகவும் அதிகமாக நேசிக்கிறான். ஒரு முஸ்லிமிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவது அல்லாஹ்விற்கு மிகவும் பிடித்தமான நற்காரியமாகும். அல்லது அந்த முஸ்லிமின் ஏதேனும் ஒரு சிரமத்தை போக்க வேண்டும். அல்லது அவருக்குரிய கடன் சுமையை குறைக்க வேண்டும். அவருக்கு ஏற்பட்டிருக்கும் வேதனையை போக்க வேண்டும். இந்த எனது மஸ்ஜிதில் ஒரு மாத காலம் நான் பள்ளியிலேயே தங்கி வணக்கங்கள் செய்வதைக் காட்டிலும் ஒரு சகோதரனின் தேவையை நிறைவேற்றுதற்காக நான் அவரோடு வெளியே நடந்து செல்வதே எனக்கு மிகவும் பிரியமானதாகும்" (الطبراني في الكبير 453/12)

இதனடிப்படையில் இந்த அரசு செயல்படுகிறது. எந்த ஒரு ஏற்றத்தாழ்வும், பாகுபாடும் பார்க்காமல் குடிமக்கள் அனைவரையும் மகிழ்ச்சியோடு வாழச் செய்கிறது. மனமுவந்து உதவி செய்கிறது, ஒவ்வொரு மனிதனின் தேவையை அறிந்து அவனை கௌரவமாக வாழ வழி செய்கிறது.

நம்மீது எண்ணற்ற அருட்கொடைகளை பொழிந்துள்ள அல்லாஹ்விற்கே புகழனைத்தும். நன்றிகள் அனைத்தும் அவனுக்கே உரித்தானதாகும்.

اللَّهُ أَكْبَرُ    اللَّهُ أَكْبَرُ    اللَّهُ أَكْبَرُ
اللَّهُ أَكْبَرُ    اللَّهُ أَكْبَرُ    اللَّهُ أَكْبَرُ

அல்லாஹு அக்பர் வல் ஹம்து லில்லாஹி கஸீரா
அவனுடைய கிருபையின் மூலமே அனைத்து நற்செயல்களும் நடக்கின்றன.

**கவனமாக கேளுங்கள்! தொழுகையாளிகளே!** அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள். தொடர்ந்து அவனுக்கு கீழ்படிந்து நடங்கள் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது. நபி இப்ராஹீம் அலைஹிவ ஸல்லம் அவர்களின் வழிமுறையை பின்பற்றி உலகெங்கிலும் உள்ள பெரும்பான்மையான முஸ்லிம்கள் அல்லாஹ்வுடைய பாதையில் குர்பானி கொடுத்து இறைவனின் நெருக்கத்தை பெறுகிறார்கள்.

ஆம் நபி இப்ராஹீம் அலைஹிவ ஸல்லம் அவர்கள் தம்முடைய இறைவனின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக சிறிதும் தயக்கமின்றி தமது மகனார் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அறுக்க முனைந்தார்கள். அளவற்ற அருளாளனின் கிருபையினால் காட்சி மாறியது. ஆட்டை பலி கொடுத்தார்கள். இந்த உன்னத வழிமுறையை நம்முடைய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நடைமுறைப் படுத்திக் காட்டினார்கள். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ أَوَّلَ مَا نَبْدَأُ فِي يَوْمِنَا هَذَا أَنْ نُصَلِّيَ، ثُمَّ نَرْجِعَ فَنَنْحَرَ

"நாம் முதலில் தொழுகையை ஆரம்பிப்போம். அதன்பின்னர் (இல்லம்) திரும்பி அறுத்துப் பலியிடுவோம். இவ்வாறு செய்கிறவர் நம்முடைய வழிமுறையைப் பேணியவராவார்" (متفق عليه)

இந்த குர்பானி சட்டத்தை நிறைவேற்றுவதற்காக நமது அரசு பிரத்தியேகமாக இறைச்சி கூடாரங்களை அமைத்துள்ளது. பலியிடப்படும் கால்நடைகளின் ஆரோக்கிய நிலையை உறுதி செய்வதற்காக கால்நடை மருத்துவர்களும் தயார் நிலையில் உள்ளனர். நாமும் இந்த கூடாரங்களை பயன்படுத்திக் கொண்டால் கால்நடைகளை ஒரு ஒழுங்கு முறையோடு குர்பானி கொடுக்கலாம். மேலும் இடங்கள் அனைத்தும் தூய்மையாக இருக்கும்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُولِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹூம் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்க்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்! யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும்

அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக! யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

**மன்னிக்கப்பட்ட அடியார்களாக விடைபெறுங்கள்**!!